செய்தி வெளியீடு எண்: 482 நாள் : 11.09.2013

**பத்திரிக்கைச் செய்தி**

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன் படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் செப்டம்பர் 2013 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்ட முகாம் 14.09.2013 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மை செயலாளர் /ஆணையாளர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி,<br>15, அம்மையம்மாள் தெரு, புளியந்தோப்பு, சென்னை 12<br>( Near TB Hospital) |
| 2 | இராயபுரம் | சென்னை உயர்நிலைப்பள்ளி,<br>CPT காலனி, எண் 1, அ.அ.திட்ட சாலை, புதுவண்ணாரப்பேட்டை, செ 81 |
| 3 | பெரம்பூர் | அரசு நிதி உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி<br>294 B பனந்தோப்பு ரயல்வே காலனி, அயனாவரம், சென்னை 23<br>( அயனாவரம் டெப்போ அருகில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>32, சுந்தரம் பிள்ளை தெரு, புரசைவாக்கம், சென்னை 84 (புரசைவாக்கம் டேங்க் பஸ் ஸ்டாப் அருகில்) |
| 5 | அம்பத்தூர் | அரசு மேல்நிலைப்பள்ளி<br>கீழ அயனம்பாக்கம், சென்னை 95 ( கால்நடை மருத்துவமனை அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | சென்னை மேல்நிலைப்பள்ளி<br>1/6, பள்ளிகூடத் தெரு, கோயம்பேடு, சென்னை 107<br>(நாதெள்ள சம்பத்து செட்டி கல்யாண மண்டபம் எதிரில்) |
| 7 | திருவொற்றியூர் | மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,<br>பிளாக் 57, மணலி புதுநகர், சென்னை 103 ( அரசு மருத்துவமனை அருகில்) |
| 8 | ஆவடி | சமுதாய நலக்கூடம்<br>கீழ் கொண்டையார் கிராமம், திரௌபதி அம்மன் கோயில் அருகில்,<br>சென்னை 602024 |
| 9 | தி.நகர் | அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி<br>4, செட்டித்தெரு, போரூர், சென்னை 116 ( காவல் நிலையம் எதிரில்) |
| 10 | மயிலாப்பூர் | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி ,<br>10, சிருங்கேரி மடம் சாலை, மந்தவெளி, சென்னை 28<br>( மந்தவெளி ரயில்நிலையம் அருகில்) |
| 11 | பரங்கிமலை | பஞ்சாயத்து அலுவலகம், மூவரசம்பேட்டை |
| 12 | தாம்பரம் | புனித தோமையர்மலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,<br>பொழிச்சலூர் மெயின்ரோடு, பொழிச்சலூர் சென்னை 74<br>( பஞ்சாயத்து அலுவலகம் அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | அட்வென்ட் கிறிஸ்துவ தொடக்கப்பள்ளி,<br>40, நாயுடு தெரு, கோட்டூர், சென்னை 85 |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி,<br>1, கிரியப்பா ரோடு, தி.நகர், சென்னை 17 ( ஜிஆர்டி ஓட்டல் பின்புறம்) |
| 15 | சேப்பாக்கம் | மாநகராட்சி சமூக நலக்கூடம்<br>13/48 , சிங்கண்ண செட்டித்தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 2<br>( காவல் நிலையம் எதிரில்) |
| 16 | சோழங்கநல்லூர் | அரசு மேனிலைப்பள்ளி<br>10வது பிரதான சாலை, ஒக்கியம் துரைப்பாக்கம், கண்ணகி நகர், சென்னை 97 |

முதன்மை செயலாளர் /ஆணையாளருக்காக